


# விசுவாச அறிக்கை (Mr.NIEL.T. ANDERSON)

மெய்யான, ஜீவனுள்ள தேவன் ஒருவரே (யாத்திராகமம் 20:2–3). அவர் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார். நம்மைப் படைத்தவர் அவரே, காக்கிறவர் அவரே, ஆதியும் அந்தமுமானவரும் அவரே. எல்லாப் புகழுக்கும், கனத்திற்கும், மகிமைக்கும் பாத்திரரும் அவரே (வெளிப்படுத்தல் 4:11, 5:9–10, ஏசாயா 43:1,7,21).

இயேசு கிறிஸ்துவே மேசியா, வார்த்தை மாம்சமாகி நமது மத்தியில் வந்து வாழ்ந்தவர் அவரே (யோவான் 1:1,14). அவர் பிசாசின் கிரியைகளை அழிக்கும்படியாக (1 யோவான் 3:8) வந்தார் எனவும், துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் எனவும் விசுவாசிக்கிறேன் (கொலோசெயர் 2:15).

நான் பாவியாய் இருக்கையிலே கிறிஸ்து எனக்காக மரித்ததினாலே தேவன் என் மேலுள்ள தமது அன்பை விளங்கப் பண்ணினார் என்று விசுவாசிக்கிறேன் (ரோமர் 5:8). அவர் என்னை, இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கித் தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினார் என்றும், அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு எனக்கு உண்டு என்று விசுவாசிக்கிறேன்.

நான் இப்போது தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறேன் என்றும் (1 யோவான் 3:1–3), கிறிஸ்துவுடனே கூட உன்னதங்களில் உட்கார வைக்கப்பட்டுள்ளேன் என்றும் (எபேசியர் 2:6) விசுவாசிக்கிறேன். நான் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டேன்

என்றும், இது என்னால் ஆனது அல்ல, தேவனுடைய ஈவு என்றும் (எபேசியர் 2:8) விசுவாசிக்கிறேன்.

நான் கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவதையே தெரிந்து கொள்ளுவேன் (எபேசியர் 6:10). நான் மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைப்பதில்லை (பிலிப்பியர் 3:3). ஏனெனில் எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகள் அல்ல (2 கொரிந்தியர் 10:4). நான் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டு (எபேசியர் 6:10–20), என் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவும், பிசாசை எதிர்த்து நிற்கவும் தெரிந்து கொள்கிறேன்.

கிறிஸ்துவாலே அன்றி என்னால் எதுவும் செய்ய இயலாது (யோவான் 15:5), ஆகவே அவரையே முற்றுமாகச் சார்ந்திருக்கிறேன். நான் அதிகக் கனி கொடுக்கும் படியாகவும் அதன் மூலம் ஆண்டவரை மகிமைப்படுத்தும்படியாகவும் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதைத் தெரிந்து கொள்கிறேன் (யோவான் 15:8). இயேசுவே என்னுடைய கர்த்தர் என்று சாத்தானுக்கு அறிவிக்கிறேன் (1 கொரிந்தியர் 12:3). என்னுடைய வாழ்க்கையில் சாத்தானின் கிரியைகளையும், போலி வரங்களையும் நிராகரிக்கிறேன்.

சத்தியம் என்னை விடுதலையாக்கும் (யோவான் 8:32) என்றும், ஒளியில் நடப்பது ஒன்றே தேவனோடுள்ள ஐக்கியத்தைக் காத்துக் கொள்ளும் வழி (1 யோவான் 1:7) என்றும் விசுவாசிக்கிறேன். எனவே, என்னுடைய எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்க் கொண்டுவரத்தக்கதாகச் சிறைப்படுத்துவதன் மூலம் சாத்தானுடைய வஞ்சகத்திற்கு எதிர்த்து நிற்கிறேன் (2 கொரிந்தியர் 10:5) வேதாகமம் ஒன்றே அதிகாரப்பூர்வமான, நிலையான அளவீடு, நாம் நடக்க வேண்டிய வழியைப் போதிக்கும் நெறிநூல் என்று அறிவிக்கிறேன் (2 தீமோத்தேயு 3:15–16), அன்புடன் சத்தியத்தைப் பேச, கைக் கொள்ளத் தெரிந்து கொள்கிறேன் (எபேசியர் 4:15).

என்னுடைய சரீரத்தை நீதியின்அவயமாக ஒப்புக் கொடுக்க, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கிறேன். தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, என் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகும்படி தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையினாலே என் மனதை நிரப்பத் தெரிந்து கொள்கிறேன் (ரோமர் 6:13, 12:1–2). பழைய மனிதனை அவனது சகல துர் இச்சைகளோடும்

செயல்களோடும் களைந்து போட்டு புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளுகிறேன் (கொலோசெயர் 3:9–10). கிறிஸ்துவுக்குள் நான் ஒரு புதுச்சிருஷ்டி என அறிவிக்கிறேன் (2 கொரிந்தியர் 5:17).

பரம பிதாவே, நீர் என்னை உனது பரிசுத்த ஆவியானவரால் நிரப்ப வேண்டும் என்றும் (எபேசியர் 5:18), சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த வேண்டும் என்றும் (யோவான் 16:13), என்னுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றாதபடி பாவத்தை மேற்கொண்டு வாழத்தக்கதாக என் வாழ்வை உமது வல்லமையால் இடைகட்டியருள வேண்டும் என்றும் (கலாத்தியர் 5:16) ஜெபிக்கிறேன். என் மாம்சத்தைச் சிலுவையில் அறைகிறேன் (கலாத்தியர் 5:24), ஆவிக்கேற்றபடி வாழத் தெரிந்து கொள்கிறேன்.

சுயநலமான அனைத்து ஆசைகளையும் இலட்சியங்களையும் வெறுத்துவிட்டு, அன்பு என்ற ஒரே முடிவான இலட்சியத்துடன் வாழத் தீர்மானிக்கிறேன் (1 தீமோத்தேயு 1:5). என் தேவனாகிய கர்த்தரை என் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழுச் சிந்தையோடும் அன்பு கூறுவதும், என்னைப் போல் என் பிறனை நேசிப்பதும் ஆகிய இருபெரும் கற்பனைகளுக்கும் கீழ்படியத் தெரிந்து கொள்கிறேன் (மத்தேயு 22:37–39).

இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை விசுவாசிக்கிறேன் (மத்தேயு 28:18), அவரே சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராய் இருக்கிறார் (கொலோசெயர் 2:10), நான் கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் அவயவமாய் இருப்பதால் கிறிஸ்துவுக்குள் சாத்தான் மீதும் அவனது பிசாசுகள் மீதும் எனக்கு அதிகாரம் உண்டு என்று விசுவாசிக்கிறேன் (எபேசியர் 1:19–23). ஆகவே, தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கவும் சாத்தானை எதிர்த்து நிற்கவும், வேண்டுமென்ற கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன் (யாக்கோபு 4:7), சாத்தான் என் முன்னின்று அகல வேண்டும் என கிறிஸ்துவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்.

நன்றி இது நீல்.T.ஆன்டர்சன் எழுதிய “ அடிமைத்தனத்தை முறிப்பவர் “ என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்
www.ratchipu.com